**சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்**

முன்னிலை: திரு. டி. செல்வம், எம்.எல்.,
சார்பு நீதிபதி, சத்தியமங்கலம்.

2017ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 12ம் நாள் திங்கட் கிழமை
(2048 திருவள்ளுவராண்டு ஹேவிளம்பி வருடம் கார்த்திகை திங்கள் 26ம் நாள்)

**மேல்முறையீட்டு வழக்கு எண்.1/2017**
**மற்றும்**
**குறுக்கு ஆட்சேபனை மேல்முறையீட்டு வழக்கு எண்.1/2017**

மேல்முறையீட்டு வழக்கு எண்.1/2017

புட்டுசித்தம்மா ... மேல்முறையீட்டாளர்/வாதி

/எதிர்/

1. ஜடமாதம்மா
2. சன்னம்மா
3. புட்டம்மா ... எதிர்மேல்முறையீடுதாரர்கள்/பிரதிவாதிகள்

குறுக்கு ஆட்சேபனை மேல்முறையீட்டு வழக்கு எண்.1/2017

சன்னம்மா ... மேல்முறையீட்டாளர்/2-ம் பிரதிவாதி

/எதிர்/

1. புட்டுசித்தம்மா
2. ஜடமாதம்மா
3. புட்டம்மா ... எதிர்மேல்முறையீட்டாளர்கள்

இம்மேல்முறையீடு மற்றும் குறுக்கு ஆட்சேபனை மேல்முறையீடானது சத்தியமங்கலம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அ.வ.எண்.139/2014-ல் 18.10.2016-ம் தேதி வழக்கை அனுமதித்து பிறப்பித்த தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக வாதியாலும், 2-ம் பிரதிவாதியாலும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

விசாரணை நீதிமன்றத்தில் தரப்பினர்களின் விவரம்:

புட்டுசித்தம்மா் ... வாதி

/எதிர்/

1. ஜடமாதம்மா
2. சன்னம்மா
3. புட்டம்மா ... பிரதிவாதிகள்

இம்மேல்முறையீட்டு வழக்கு எண்.1/2017 மற்றும் குறுக்கு ஆட்சேபனை மேல்முறையீட்டு வழக்கு என்.1/2017 வழக்குகள் 28.11.2017-ம் தேதியன்று என் முன்பாக, இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மேல்முறையீட்டாளர் தரப்பில் வழக்குரைஞர் திரு. பி. முரளிதரன் அவர்களும், எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் வழக்குரைஞர் திரு. எஸ். கே. சிவகுமார் அவர்களும், 3-ம் எதிர்மேல்முறையீட்டாளர் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், குறுக்கு ஆட்சேபனை மேல்முறையீட்டாளர் தரப்பில் வழக்குரைஞர் திரு. எஸ். கே. சிவகுமார் அவர்களும், 1-ம் எதிர்மேல்முறையீட்டுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு. பி. முரளிதரன் அவர்கள் ஆஜராகயும், 2,3 எதிர்மனுதாரர்கள் ஒருதலைபட்சமாக்கப்பட்டு, இரு தரப்பிலும் கேட்கப்பட்டு விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரை, தீர்ப்பாணை, இரு தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களைப் பரிசீலனை செய்து இதுநாள் வரையில் இந்நீதிமன்ற ஆய்விலிருந்து வந்த இம்மேல்முறையீட்டில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## <u>தீர்ப்புரை</u>

<u>1. மேல்முறையீட்டு வழக்கின் பரிகாரம்:</u>

இந்த மேல்முறையீடு சத்தியமங்கலம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.139/2014-ல் 18.10.2016-ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்து அசல் வழக்கை அனுமதிக்க வேண்டுமென்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>2. குறுக்கு ஆட்சேபனை மே.மு.வ.எண்.1/2017-ன் பரிகாரம் :</u>

இந்த குறுக்கு ஆட்சேபனை மேல்முறையீடு சத்தியமங்கலம் மாவட்ட

உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.139/2014—ல் 18.10.2016—ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்து அசல் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. அ.வ.எண்.139/2014—ன் பரிகாரம்:

வாதி தான் தாவா சொத்தின் முழு உரிமையாளர் என்று விளம்புகை செய்ய வேண்டியும், பிரதிவாதிகள் வாதியினுடைய அனுபோக சுவாதீனத்தில் இடையூறு செய்யாமல் இருக்கும் பொருட்டு ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பாகாரம் வேண்டியும், செலவுத் தொகை கோரியும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. அ.வ.எண்.139/2014—ன் வழக்குரையின் சுருக்கம்:

வழக்கு ஏ அட்டவணை சொத்துக்கள் ஒரு புட்டுசித்தம்மா என்பவரின் சுய சம்பாத்திய சொத்துக்கள் ஆகும். அதில் 4—வது அயிட்ட சொத்தானது 05.04.1970—ல் கிரையம் பெறப்பட்டதாகும். வருவாய் ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. 3—ம் அயிட்ட சொத்தானது புட்டுசித்தய்யாவின் தாயார் புட்டுசித்தம்மா 22.06.2001—ல் கொடுத்த ஆவணம் மூலமாகவும், 13.09.2001—ல் கொடுத்த ஆவணம் மூலமாகவும் அவர் உரிமையாளர் ஆவார். பி அட்டவணை சொத்தானது 22.06.2001 தேதியிட்ட உயில் ஆவணத்தின்படி புட்டுசித்தய்யாவிற்கு கிடைத்த குடியிருப்பு சொத்தாகும். அதை அவர் 21.06.2014—ல் இறக்கும் வரை அனுபவித்து வந்தார். மேற்படி வழக்கு ஏ அட்டவணையில் உள்ள 1,2,4 அயிட்ட சொத்துக்களின் பி அட்டவணை சொத்தையும் 29.03.2012 தேதியிட்ட உயில் மூலமாக இந்த வாதி பெயரில் எழுதிக் கொடுத்துள்ளார். மேற்படி 4—ம் அயிட்ட செத்தை மட்டும் உயிலில் குறிப்பிடாததால் வாதியானவர் மேற்படி புட்டுசித்தய்யாவின் மனைவி என்ற முறையில் உரிமைதாரர் ஆவார். வாதி பி அட்டவணை சொத்தில் குடியிருந்து வந்து, ஏ அட்டவணை சொத்தில் விவசாயம் செய்து வருகிறார்.

01.08.2014 முதல் பிரதிவாதிகள் வாதியின் அனுபவத்தை இடையூறு செய்து வருகிறார்கள். எனவே வாதி தான் தாவா சொத்தின் முழு உரிமையாளர் என்று விளம்புகை செய்ய வேண்டியும், பிரதிவாதிகள் வாதியினுடைய அனுபோக சுவாதீனத்தில் இடையூறு செய்யாமல் இருக்கும் பொருட்டு ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பாகாரம் வேண்டியும், செலவுத் தொகை கோரியும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>5. 2–ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் வழக்குரைச் சுருக்கம்:</u>

வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. எதிர்உரையில் சொல்லப்படும் ஒப்புக்கொள்ளப்பட்ட விவரங்களைத் தவிற மற்றவை மறுக்கப்படுகிறது. வழக்குச் சொத்துக்கள் புட்டு சித்தய்யாவிற்கு பாத்தியப்பட்டது என்பது உண்மை. 29.03.2012–ல் வாதி பெயருக்கு உயில் எழுதி வைத்தும், அவர் இறந்த பிறகு அது அனுபவத்திற்கு வந்து வாதி வழக்குச் சொத்தை அனுபவித்து வருகிறார் என்பதும், வாதியானவர் புட்டுசித்தய்யாவின் ஒரே வாரிசு என்பதும் பொய்யான சங்கதியாகும். வாதியானவர் புட்டுசித்தய்யாவின் மனைவி, ஆனால் திருமணத்தின் மூலமாக குழந்தை இல்லாததால் கருத்து வேறுபாடு கொண்டு தனித்தனியாக பிரிந்து வாழ்ந்து வந்தார்கள். 2–ம் பிரதிவாதி மேற்படி புட்டுசித்தய்யாவின் சகோதரி ஆவார். அதனால் அவர் இறக்கும் வரை இந்த பிரதிவாதியின் பராமரிப்பில் தான் இருந்து வந்தார். அவர் கடைசி காலத்தில் புற்று நோயால் பாதிக்கப்பட்டதால் இந்த 2–ம் பிரதிவாதிக்கு நல்ல ஏற்பாடு செய்யும் விதத்தில் 12.12.2012 அன்று ஒரு உயில் ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார். பின்பு அவர் 21.06.2014–ல் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். மேற்படி 12.12.2004 தேதியிட்ட உயில்படி இந்த 2–ம் பிரதிவாதி தாவா சொத்தில் உரிமை பெற்று அனுபவித்து வருகிறார். வாதி சொல்லியுள்ள விவரங்கள் தவறானது. வழக்கிற்கான வழக்கு மூலம் கிடையாது.

எனவே வழக்கை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

<u>6. 3—ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் வழக்குரைச் சுருக்கம்:</u>

வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. எதிர்உரையில் சொல்லப்படும் ஒப்புக்கொள்ளப்பட்ட விவரங்களைத் தவிற மற்றவை மறுக்கப்படுகிறது. இந்த 3—ம் பிரதிவாதி புட்டுசித்தய்யாவின் சட்டப்படியான மனைவி ஆவார். வாதி வேண்டுமென்றே இந்த பிரதிவாதியை சந்திரசேகரய்யா என்பவரின் மகள் என்று குறிப்பிட்டுள்ளார். இந்த பிரதிவாதியை இந்த வழக்கில் சேர்ப்பதற்கான எந்த ஒரு காரணங்களும் குறிப்பிடப்படவில்லை. எனவே வாதி புட்டுசித்தய்யாவின் உண்மையான மனைவி என்பதை நிரூபிக்கப்படவில்லை. வாதி 29.03.2012 தேதியிட்ட உயிலின்படி சொத்தின் உரிமையாளர் என்பது மறுக்கப்படுகிறது. புட்டுசித்தய்யா யாருக்கும் எந்த தேதியிலும் உயில் எதுவும் எழுதி வைக்கவில்லை. அவர் இறப்பதற்கு 3 ஆண்டுகளுக்கு முன்பிருந்து தொண்டையில் புற்று நோயினால் பாதிக்கப்பட்டு கர்நாடக மாநிலம் சாம்ராஜ் நகரத்தில் சிகிச்சை பெற்று வந்தார். எனவே அவருக்கு உயில் எழுதுவதற்கு நல்ல மன நிலைமை கிடையாது. வாதியானவர் இந்த பிரதிவாதியின் கணவர் புட்டுசித்தய்யாவிடம் தவறான தொடர்பை ஏற்படுத்திக் கொண்டும், அசல் கிரைய ஆவணங்களை எடுத்துக் கொண்டு ஒரு உயிலை தயார் செய்து விட்டார். ஏ மற்றும் பி அட்டவணை சொத்துக்கள் புட்டுசித்தய்யாவின் வாரிசுகள் என்ற முறையில் இந்த பிரதிவாதிகளுக்கு கிடைத்து அவர்களுடைய அனுபவத்தில் இருந்து வருகிறது. உண்மையாகவே உயில் எழுதி இருந்தால் 4—ம் அயிட்ட சொத்தும் குறிப்பிடப்பட்டிருக்கும். இந்த வாதி பி அட்டவணை சொத்தில் குடியிருந்து ஏ அட்டவணை சொத்தில் விவசாயம் செய்து வருவதாக சொல்லியிருக்கும் விவரம் பொய்யானது. வழக்கிற்காக பொய்யான ஆவணங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன. வழக்கு சொத்து விவரங்கள் தவறானது. எனவே

வழக்கை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

7. விசாரணை நீதிமன்றத்தில் வழக்கை தீர்மானிக்கப்பட்ட எழுவினாக்கள் பின்வருமாறு.

1. 29.03.2012 தேதியிட்ட உயில் உண்மையானதா? செல்லக்கூடியதா? தரப்பினர்களை கட்டுப்படுத்தக்கூடியதா?
2. வாதி வழக்குச் சொத்தின் சட்டபடியான உரிமையாளரா?
3. வாதி வழக்குச் சொத்தின் அனுபவத்திலும், பயன்பாட்டிலும் உள்ளாரா?
4. வாதி வழக்குரையில் கோரியுள்ள விளம்புகை பாகாரம் கிடைக்க கூடியதா?
5. வாதி கோரிய நிரந்தர உறுத்துககட்டளை பரிகாரம் அவருக்கு கிடைக்ககூடியதா?
6. வேறு என்ன பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது?

<u>18.10.2016 தேதியில் வனையப்பட்ட கூடுதல் எழுவினா :</u>

1. 12.12.2012 தேதியிட்ட உயிலானது உண்மையானதா? தரப்பினர்களை கட்டுப்படுத்தக்கூடியதா?

8. விசாரணை நீதிமன்றத்தில் வாதி தரப்பில் வா.சா.1 முதல் வா.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.13 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.1 முதல் பி.வா.சா.7 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இரு தரப்பிலும் கேட்கப்பட்டு இறுதியாக வழக்கு பகுதியாக அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி விசாரணை நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பிலும், தீர்ப்பாணையிலும் மனக்குறைவற்ற வாதி மேல்முறையீட்டையும், 2—ம் பிரதிவாதி குறுக்கு ஆட்சேபனை

மேல்முறையீட்டையும் தாக்கல் செய்துள்ளார்கள்.

9. <u>மேல்முறையீட்டிற்கான காரணங்கள்:</u>

விசாரணை நீதிமன்ற தீர்ப்பும் தீர்ப்பாணையும் சட்டத்திற்கும், சாட்சியத்திற்கும் ஆவணங்களுக்கும் எதிராக உள்ளது. விசாரணை நீதிமன்றம் விளம்புகை பரிகாரத்தை வழங்கி உறுத்துக்கட்டளை பரிகாரத்தை தள்ளுபடி செய்திருப்பது தவறானதாகும். எனவே இந்த மேல்முறையீடு 2—ம் பிரதிவாதிக்கு எதிராக மட்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 3—ம் பிரதிவாதி புட்டுசித்தய்யாவின் மனைவி என்பதும், 2—ம் பிரதிவாதிக்கு உயில் மூலமாக சொத்து கொடுக்கப்பட்டது என்பதும் நிராகரிக்கப்பட்டு இந்த வாதி வழக்குச் சொத்திற்கு வாரிசுதாரர் என்ற முறையில் விளம்புகை பரிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 2—ம் பிரதிவாதி உயில் மூலமாக சுவாதீனம் உரிமை கேட்டுள்ளதையும் விசாரணை நீதிமன்றம் நிராகரித்துள்ளது. ஆனாலும் வாதி வழக்குச் சொத்தின் அனுபவத்தில் இல்லை என்று சொல்லி உறுத்துக்கட்டளை பரிகாரம் கொடுக்கப்படவில்லை. 2—ம் பிரதிவாதி வழக்குச் சொத்தில் அனுபவத்தில் இருந்ததற்கான எந்த ஒரு ஆவணங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மேற்படி புட்டுசித்தய்யா இறந்தவுடன் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் வருவாய் ஆவணங்களில் இந்த வாதியின் பெயரோ, 2—ம் பிரதிவாதியின் பெயரோ குறிப்பிடப்படவில்லை. அதை விசாரணை நீதிமன்றம் கருத்தில் கொள்ளாமல் உறுத்துக்கட்டளை பரிகாரத்தை பொறுத்து வழக்கை தள்ளுபடி செய்திருப்பது தவறானதாகும். மேலும் வாதியானவர் படிப்பறிவற்ற கிராமத்து பெண் என்பதால் அவருக்கு தமிழ் தெரியாத மொழி என்பதாலும், மொழிபெயர்ப்பாளரினுடைய விவரங்களின் அடிப்படையில் அவர் பதில் சொல்லாமல் இருந்ததால் விசாரணை நீதிமன்றம் அவருக்கு எதிராக தீர்மானித்திருப்பது தவறாகும். எனவே சத்தியமங்கலம் மாவட்ட உரிமையியல்

நீதிமன்றத்தில் அ.வ.எண்.139/2014–ல் 18.10.2016–ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்து அசல் வழக்கை அனுமதிக்க வேண்டுமென்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

10. குறுக்கு ஆட்சேபனை மேல்முறையீட்டிற்கான காரணங்கள்:

விசாரணை நீதிமன்ற தீர்ப்பும் தீர்ப்பாணையும் சட்டத்திற்கும், சாட்சியத்திற்கும் ஆவணங்களுக்கும் எதிராக உள்ளது. இந்த குறுக்கு மேல்முறையாட்டாளர்களின் ஆவணங்களை விசாரணை நீதிமன்றம் கவனத்தில் கொள்ளவில்லை. விசாரணை நீதிமன்றம் சரியான எழுவினாக்கள் வனைந்து வழக்கை தீர்மானிக்கவில்லை. 12.12.2012 தேதியிட்ட உயில் ஆவணத்தை பற்றி விசாரணை நீதிமன்றம் சரியான தீர்வு எதுவும் காணவில்லை. மேலும் மேற்படி உயில் சம்மந்தமாக விசாரிக்கப்பட்ட பி.வா.சா.2,3 சாட்சிகளை சரியான காரணங்கள் இன்றி நிராகரித்திருப்பது தவறானதாகும். மேலும் மேற்படி உயில் ஆவணம் அமலுக்கு வந்து தான் 2–ம் பிரதிவாதி அனுபவத்தில் இருக்கிறார் என்பதை சாட்சிகள் மூலம் உறுதி செய்யப்பட்ட பிறகு வாதி இறந்து போன புட்டுசித்ய்யாவின் முதல்நிலை வாரிசு என்ற முறையில் விளம்புகை பரிகாரம் வழங்கியிருப்பது தவறாகும். எனவே விசாரணை நீதிமன்றம் 2–ம் பிரதிவாதியை தான் சொத்தின் உரிமையாளர் என்று விளம்புகை செய்து சொத்தின் சுவாதீனத்தை உறுதி செய்து தீர்ப்பளித்திருக்க வேண்டும். எனவே சத்தியமங்கலம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.139/2014–ல் 18.10.2016–ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்து அசல் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

11. இம்மேல்முறையீடு மற்றும் குறுக்கு மேல்முறையீட்டில் தீர்வுக்குரிய பிரச்சனைகள்:

1. 29.03.2012 தேதியிட்ட வாதி பெயரில் ஏற்பட்ட உயில் விசாரணை

நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளதா?

2. 12.12.2012 தேதியிட்ட 2—ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட உயில் விசாரணை நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளதா?

3. வாதி சொத்தின் உரிமையாளர் என்று விசாரணை நீதிமன்றம் தீர்மானித்திருப்பது சரியானதா?

4. வழக்குச் சொத்தின் சுவாதீனம் 2—ம் பிரதிவாதியிடம் இருப்பதாக விசாரணை நீதிமன்றம் தீர்மானித்திருப்பது சரியானதா?

5. இந்த மேல்முறையீடு வழக்கு எண். 1/2017 அனுமதிக்கப்பட வேண்டியதா?

6. இந்த குறுக்கு ஆட்சேபனை மேல்முறையீடு வழக்கு எண்.1/2017 அனுமதிக்கப்பட வேண்டியதா?

7. வேறு என்ன பரிகாரங்கள் கிடைக்கத்தக்கது?

12. இம்மேல்முறையீட்டின் வசதி மற்றும் சுருக்கம் கருதி தரப்பினர்கள் விசாரணை நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டதைப் போல் மேல்முறையீட்டாளர் வாதி என்றும், எதிர்மேல்முறையீட்டாளர்கள் பிரதிவாதிகள் என்றும் அழைக்கப்படுவார்கள்.

13. இந்த மேல்முறையீட்டில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. மேல்முறையீடும் குறுக்கு மேல்முறையீடும் அ.வ.எண்.139/2014—ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் மேற்படி இரண்டு மேல்முறையீடுகளும் ஒன்றாக சேர்க்கப்பட்டுள்ளது.

<u>14. பிரச்சனை எண்கள் 1 மற்றும் 2 :</u>

14.1. இரு தரப்பிலும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

14.2. அசல் வழக்கானது வாதியால் வழக்குச் சொத்து தன் கணவர் புட்டுசித்தய்யாவுக்கு பாத்தியப்பட்டது என்றும், அவர் எழுதி வைத்த 29.03.2012 தேதியிட்ட உயில்படியும், வாதி அவருடைய முதல்நிலை வாரிசு என்பதாலும் வழக்குச் சொத்து அவருடைய அனுபவத்தில் உள்ளது என்று விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

14.3. 2—ம் பிரதிவாதியின் தரப்பில் 2—ம் பிரதிவாதியானவர் மேற்படி புட்டுசித்தய்யாவின் சகோதரி என்றும், வாதிக்கும் புட்டுசித்தய்யாவிற்கும் குழந்தைகள் இல்லாததால் பிரச்சனை ஏற்பட்டு வாதி பிரிந்து சென்றுவிட்டார் என்றும், மேற்படி புட்டுசித்தய்யா இறக்கும் வரை இந்த 2—ம் பிரதிவாதியின் பராமரிப்பில் இருந்தார் என்றும், அதனால் 12.12.2012 தேதியில் தனது பெயருக்கு வழக்குச் சொத்துக்களைப் பொறுத்து ஒரு உயில் எழுதிக் கொடுத்துள்ளார் என்றும், அதன் அடிப்படையில் வழக்குச் சொத்திற்கு 2—ம் பிரதிவாதி உரிமையாளர் என்றும், அனுபவம் அவரிடம் உள்ளது என்றும் ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது.

14.4. 3—ம் பிரதிவாதி தரப்பில் 3—ம் பிரதிவாதி தான் இறந்து போன புட்டுசித்தய்யாவின் உண்மையான சட்டப்படியான மனைவி என்றும், வழக்குச் சொத்துக்களைப் பொறுத்து புட்டுசித்தய்யா எந்த ஒரு ஆவணங்களையும் எழுதி வைக்கவில்லை என்றும், இறப்பதற்கு 3 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தொண்டையில் புற்று நோய் பாதிப்பு ஏற்பட்டு சாம்ராஜ் நகர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றும் நோய் குணமடையாததால் இறந்துவிட்டதாகவும், எனவே வழக்குச் சொத்தைப் பொறுத்து வாதிக்கும், 1,2 பிரதிவாதிகளுக்கும் எந்த ஒரு உரிமையும் இல்லை என்றும், அதனால் வழக்குச் சொத்துக்களை வாரிசு முறையில் பாக பிரிவினை செய்து இந்த பிரதிவாதிக்கு கொடுக்க வேண்டுமென்றும், வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது.

14.5. இது சம்மந்தமாக வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் ஆவணங்களை இந்த மேல்முறையீட்டு நீதிமன்றம் பரிசீலிக்கும் போது வாதியானவர் வா.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார். முதல்விசாரணை வாக்கு மூலம் வழக்குரையை போன்றுள்ளது. அவருடைய குறுக்கு விசாரணை வாக்கு மூலத்தை பரிசீலிக்கும் போது 1,2 பிரதிவாதிகள் தன்னுடைய கணவரின் சகோதரிகள் என்றும், 3–ம் பிரதிவாதி சொத்தில் தனக்கு பங்கு வேண்டும் என்று கேட்டதால் அவரையும் அதில் சேர்த்துள்ளதாகவும் சொல்லியுள்ளார். தன் கணவர் தனக்கு எழுதிக் கொடுத்த தோட்டத்தில் தான், தான் வசித்து வருவதாகவும், அதில் வீடு இருப்பதாகவும், குடும்ப அட்டை அருள்வாடி கிராமத்தில் இருக்கிறது என்றும், தான் கர்நாடகாவில் வசித்து வருகிறேன் என்பதை மறுத்தும், தன் கணவருக்கு கழுத்தில் அறுவை சிகிச்சை செய்ததால் இறந்துவிட்டார் என்றும், அவருக்கு பல் நோய் ஏற்பட்டு அதை அகற்றிய போது தான் கழுத்தில் இருந்த நரம்பு துண்டாகவிட்டது என்றும், சிகிச்சை முடிந்து 1 வருடம் தன் வீட்டில் இருந்து தான் இறந்துவிட்டார் என்றும், புற்று நோயால் தான் இறந்தார் என்று தனக்கு தெரியவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். தன் கணவரை தோட்டத்திலேயே புதைத்துவிட்டோம் என்றும், வழக்குச் சொத்தின் சர்வே எண்கள் தெரியாது என்றும், அதில் 3 ஏக்கர் தனியாகவும், 6 ஏக்கர் தனியாகவும் இருக்கிறது என்றும், தன் கணவர் இறப்பதற்கு முன்பாக 2–ம் பிரதிவாதியும், அவருடைய மகன்களும் தான் சொத்துக்களை அனுபவித்து வந்தார்கள் என்பதை மறுத்தும், சொத்துக்களில் என்ன பயிர் செய்யப்பட்டிருக்கிறது என்பதற்கு சாட்சி பதில் அளிக்க மறுத்துள்ளார். 2–ம் பிரதிவாதிக்கு உயில் எழுதி வைக்கவில்லை என்றும், தானும் தன் கணவரும் ஒன்றாக தான் வசித்து வந்ததாகவும், குழந்தைகள் இல்லை என்பதால் தானும், தன் கணவரும் தனித்தனியாக பிரிந்து வாழ்ந்து வந்ததாகவும், 2–ம் பிரதிவாதி தனது கணவரை பராமரித்தார் என்பதையும், சொத்துக்களை

அவருடைய மகன்கள் தான் அனுபவித்து வந்தார்கள் என்பதை மறுத்தும் சாட்சியம் அளித்துள்ளார். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க தன்னுடைய தம்பி தான் அழைத்து வந்தார் என்றும், தனது கணவர் 3–ம் பிரதிவாதியை திருமணம் செய்து கொண்டு கர்நாடக மாநிலம் சாம்ராஜ் நகரில் வசித்து வந்தார் என்பதை மறுத்தும், 3 வருடத்திற்கு முன்பு தனக்கும், புட்டுசித்தய்யாவிற்கும் தவறான உறவு ஏற்பட்டு உயில் சாசனத்தை ஏற்படுத்தியிருக்கிறேன் என்றும், அதனால் தான் 4–ம் அயிட்ட சொத்தை உயிலில் சேர்க்கவில்லை என்றும், எனவே தனது உயில் சந்தேகத்திற்கு இடமானது என்பதை மறுத்தும், 2–ம் பிரதிவாதி தான் சொத்தில் அனுபவத்தில் உள்ளார் என்பதை மறுத்தும், தன்னுடைய வழக்கு பொய் வழக்கு என்பதை மறுத்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

14.6. இந்த வழக்கில் விசாரிக்கப்பட்டுள்ள வா.சா.2 சாட்சியானவர் மேற்படி வா.சா.ஆ.2 உயில் ஆவணத்தில் சாட்சி கையொப்பமிட்ட நபராவார். அவருடைய முதல் விசாரணையில் புட்டுசித்தம்மா 22.06.2001 தேதியில் தனது மகன் பெயருக்கு உயில் பத்திரம் எழுதி வைத்திருப்பதாக சொல்லி தன் முன்னிலையில் ரேகை செய்தார் என்றும், அதை சாட்சி பசுவண்ணாவும், தானும் பார்த்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளதாகவும், அப்போது புட்டுசித்தம்மா நல்ல முறையில் இருந்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அவருடைய குறுக்கு விசாரணையை பார்க்கும் போது வாதி தனக்கு உறவினர் இல்லை என்றும், வாதிக்கும் தன்னுடைய கணவருக்கும் எவ்வளவு வருடத்திற்கு முன்பு திருமணம் நடந்தது என்று நியாபகம் இல்லை என்றும், வாதியின் சகோதரர் தான் தன்னை சாட்சியம் அளிக்க அழைத்தார் என்றும், உயிலில் கண்ட சர்வே எண் தனக்கு தெரியாது என்றும், உயிலில் கண்ட தோட்ட பூமியில் தான் வாதி குடியிருந்து வருகிறார் என்றும், உயில் எழுதுவதை நேரில் பார்த்தேன் என்றும், புட்டுசித்தம்மாவை சார்பதிவாளர் அலுவலகத்தில் பார்த்ததாகவும், தற்போது

வழக்குச் சொத்தில் விவசாயம் செய்யப்படவில்லை என்றும், புட்டுசித்தய்யா உயிரோடு இருக்கும் வரை அவருடைய தாயார் புட்டுசித்தம்மாவின் சொத்துக்கள் அவருடைய அனுபவத்தில் தான் இருந்தது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

14.7. வாதி தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள வா.சா.3 சாட்சியத்தை பார்க்கும் போது 29.03.2012 தேதியில் புட்டுசித்தய்யா தனது மனைவி பெயருக்கு உயில் எழுதி வைக்கப் போவதாக சொன்னாதால் தன்னை தாளவாடி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வர சொன்னார் என்றும், அன்று மதியம் தாளவாடி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்ற போது புட்டசித்தய்யா உயில் ஆவணத்தை தயார் செய்து கொண்டு வந்திருந்தார் என்றும், புட்டுசித்தய்யாவும், பிரபுவும் தன் முன்னால் கையெழுத்து செய்தார்கள் என்றும், அதை பார்த்து தாங்கள் சாட்சிகளாக கையெழுத்து செய்திருப்பதாகவும், உயில் எழுதப்பட்ட தேதியில் புட்டுசித்தய்யா நல்ல உடல் நிலையிலும், நல்ல மன நிலையிலும் இருந்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார். அவருடைய குறுக்கு விசாரணையை பரிசீலிக்கும் போது வாதியின் தம்பி தான் தன்னை சாட்சியம் அளிக்க அழைத்து வந்தார் என்றும், உயிலில் உள்ள சொத்து மல்லன்குழி கிராமத்தில் இருப்பதாகவும், அது இல்லாமல் மற்றொரு வீடு காட்டப்பட்டுள்ளது என்றும், புட்டுசித்தய்யா எந்த நோயினால் இறந்தார் என்று தனக்கு தெரியாது என்றும், அவர் தான் தன்னை சாட்சியாக கையெழுத்து போட அழைத்தார் என்றும், தான் நேரடியாக சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று தான் சாட்சியாக கையெழுத்து போட்டேன் என்றும், தான் சாட்சி கையெழுத்து போடுவதற்கு முன்பாக உயில் தயார் செய்யப்பட்டிருந்ததால் யார் சொல்லி உயில் தயார் செய்திருந்தார் என்று தனக்கு தெரியாது என்றும், உயிலின் ஒவ்வொரு பக்கத்திலும் தயார் செய்ததற்கான முத்திரை மற்றும் கையெழுத்து போடப்பட்டிருந்தது என்றும், சார்பதிவாளர் அலுவலகத்தில் தான் மற்றொரு சாட்சியும் வந்து சாட்சி கையெழுத்து போட்டார்

என்றும், 2-ம் பிரதிவாதியை தனக்கு தெரியும் என்றும், புட்டுசித்தய்யா உயிரோடு இருக்கும் போதே 2-ம் பிரதிவாதியும் அவருடைய மகன்களும் தான் வழக்குச் சொத்துக்களை அனுபவித்து வந்தார்கள் என்பதை மறுத்தும், உயில் மதியம் 2.00 மணியளவில் தான் பதிவு செய்யப்பட்டது என்றும், உயில் பதிவு செய்யப்படும் போது புட்டுசித்தம்மாவோ அவருடைய தம்பிகளோ இல்லை என்றும், தனக்கு அருள்வாடி கிராமம் தான் பூர்வீகம் என்றும், புட்டுசித்தய்யாவை 30 வருடங்களாக தனக்கு தெரியும் என்றும், அவருடைய மனைவி பெயர் புட்டுசித்தம்மா என்றும், 3-ம் பிரதிவாதி அவருடைய மனைவி என்றால் தனக்கு தெரியாது என்றும், உயிலை யார் எழுதினார் என்று தனக்கு தெரியாது என்றும், சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று அங்குள்ள பதிவேட்டிலும், உயிலிலும் தான் சாட்சி கையொப்பம் செய்ததாகவும், பிரபு என்பவர் சாட்சி கையெழுத்து போட்டதாகவும், நஷீர் என்பவர் தான் சாட்சிய கையெழுத்து போட்டார் என்றும், வாதி தனக்கு பழக்கமானவர் என்பதால் அவருக்கு சாதகமாக சாட்சியம் அளிக்கிறேன் என்பதை மறுத்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

14.8. இது சம்மந்தமாக வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை பரிசீலிக்கும் போது வா.சா.ஆ.1 ஆவணமானது இறந்து போன புட்டுசித்தய்யாவின் தாயார் பெயரில் ஏற்பட்ட கிரையப் பத்திரம் என்றும், வா.சா.ஆ.4 ஆவணம் அவர் பெயரில் கொடுக்கப்பட்ட பட்டா புத்தகம் என்றும், வா.சா.ஆ.5 ஆனது அவர் கணவர் பெயரில் கொடுக்கப்பட்ட பட்டா புத்தகம் என்பதும் தெரிய வருகிறது. அவர் இறந்து போன புட்டுசித்தய்யாவிற்கு எழுதி வைத்த உயில் வா.சா.ஆ.2 என்றும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.2 உயில் ஆவணத்தை நிரூபிக்கும் வகையில் வா.சா.ஆ.2 சாட்சியாக விசாரிக்கப்பட்டு மேற்படி வா.சா.ஆ.2 உயில் எழுதப்பட்டதும், பதிவு செய்யப்பட்டதும் நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலும் இரு தரப்பினரும் வழக்குச் சொத்துக்கள் வா.சா.ஆ.1,2,4,5 ஆவணங்கள் மூலம் தான் புட்டுசித்தய்யாவிற்கு

கிடைத்தது என்பது ஒப்புக் கொள்ளப்படுகிறது. மேலும் வா.சா.ஆ.3 ஆவணத்தின் அடிப்படையில் மேற்படி புட்டுசித்தய்யாவின் தயார் இறந்துவிட்டார் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. எனவே வழக்குச் சொத்துக்கள் புட்டுசித்தய்யாவிற்கு அவருடைய தாயாரிடமிருந்து உயில் மூலமாக கிடைத்த தனிப்பட்ட சொத்துக்கள் என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

14.9. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.6,7,8 தீர்வை ரசீதுகள் புட்டுசித்தய்யா என்பவர் பெயரில் வழங்கப்பட்டுள்ளது. அது 2012 மற்றும் 2014—ல் தீர்வை செலுத்தப்பட்டுள்ளது. மேலும் வா.சா.ஆ.9 ஆவணம் புட்டுசித்தன் என்ற பெயரில் வழக்குச் சொத்தக்களுக்கு பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ.10 ஆனது இறந்து போன புட்டுசித்தய்யா பெயரில் ஏற்பட்ட அ.பதிவேடுகள் என்பது தெரிய வருகிறது.

14.10. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.11 உயில் ஆவணம் வாதி பெயரில் அவருடைய கணவர் புட்டுசித்தய்யா எழுதி வைத்ததாக சொல்லப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தை பரிசீலிக்கும் போது மேற்படி ஆவணத்திற்கான முத்திரைத் தாள் 28.03.2012—ல் மேற்படி புட்டுசித்தய்யா பெயரில் வாங்கப்பட்டு, 29.03.2012—ல் தாளாவடியில் வைத்து இளங்கோ என்ற ஆவண எழுத்தர் மூலமாக எழுதப்பட்டு அன்றையதினமே 2.00 மணியிலிருந்து 3.00 மணிக்குள் தாளாவாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்படி புட்டுசித்தய்யா என்பவரால் தாக்கல் செய்யப்பட்டு சார்பதிவாளர்களுக்கு வா.சா.3 மற்றும் ஒரு நஷீர் என்பவர்களால் அடையாளம் காட்டப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி புட்டுசித்தய்யாவை இந்த வழக்கில் விசாரிக்கப்பட்டுள்ள வா.சா.3 சாட்சியும், ஒரு நஷீர் என்பவரும் சார் பதிவாளர் அலுவலகத்தில் புட்டுசித்தய்யாவை இன்னார் என்று நிரூபித்து சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள். மேலும் மேற்படி உயில் ஆவணத்தில் மேற்படி வா.சா.3—ம், ஒரு

பிரபு என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார்கள் என்பது தெரிய வருகிறது. மேலும் மேற்படி உயில் எழுதும் போது புட்டுசித்தய்யா 180, அருள்வாடி, மல்லன்குழி, சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம் என்ற முகவரியில் தான் இருப்பதாக சொல்லி தான் அவருடைய வாக்காளர் அடையாள அட்டையை காண்பித்து உயில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

14.11. மேற்படி ஆவணத்துடன் ஒப்பிட்டு நோக்கும் போது மேற்படி வா.சா.3 தானும் பிரபு என்பவரும் உயில் ஆவணத்தில் சாட்சியாக கையொப்பமிட்டோம் என்று சொல்லியுள்ளார். அதே போன்ற ஒரு பாய் என்றும், பெயர் தெரியாது என்றும், சார்பதிவாளர் அலுவலகத்தில் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்று சொல்லியுள்ளார். மேலும் வாதியை கடந்த 30 வருடங்களாக தெரியும் என்றும், சார் பதிவாளர் அலுவலகத்தில் கையெழுத்து போட சென்று தான் அந்த உயிலில் யார் யார் கையெழுத்து போட்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். எனவே மேற்படி வா.சா.3 சாட்சியத்தின் அடிப்படையில் அவர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று ஒரு கையெழுத்து சார்பதிவாளர் அலுவலக பதிவேட்டிலும், மற்றொரு கையெழுத்து உயிலிலும் செய்தார் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலும் சார்பதிவாளர் அலுவலகத்தில் தன்னுடன் ஒரு பாய் கையெழுத்து போட்டார் என்றும், அவருடைய பெயர் தெரியாது என்றும், அப்போது சார்பதிவாளர் அலுவலகத்தில் உயிலை பதிவு செய்ய கொடுத்த போது தான் அந்த கையெழுத்து போடப்பட்டது என்றும் தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார். எனவே மேற்படி விவரங்களிலிருந்து வா.சா.3 சாட்சியத்தில் உயில் எழுதிய பிறகு வா.சா.3-ம், ஒரு பிரபு என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார்கள் என்பதும், சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொடுத்த பின்பு மேற்படி புட்டுசித்தய்யாவை அடையாளம் காண்பித்து நிரூபிப்பதற்காக வா.சா.3-ம், ஒரு நஷீர்

என்பவரும் கையொப்பம் செய்துள்ளார்கள் என்பதும் தெரிய வருகிறது. எனவே மேற்படி வா.சா.ஆ.11 உயில் ஆவணத்தை பொறுத்தவரையில் அது பதிவு செய்யப்பட்ட ஆவணமாக இருப்பதாலும், அந்த பதிவை இறந்து போன புட்டுசித்தய்யாவே முன்னின்று செய்திருப்பதாலும், மேலும் தனது மனைவிக்கு தனது சொத்துக்கள் தன்னுடைய ஆயுளுக்கு பின்னிட்டு கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் உயில் எழுதப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. எனவே இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 68—ன்படியும்,

> Section 68 - Proof of execution of document required by law to be attested If a document is required by law to be attested, it shall not be used as evidence until one attesting witness at least has been called for the purpose of proving its execution, if there be an attesting witness alive, and subject to the process of the Court and capable of giving evidence:
>
> [Provided that it shall be necessary to call an attesting witness in proof of the execution of any document, not being a Will, which has been registered in accordance with the provisions of the Indian Registration Act, 1908 (16 of 1908), unless its execution by the person by whom it purports to have been executed is specifically denied.]

இந்தியன் வாரிசுரிமைச் சட்டப் பிரிவு 63—ல் உள்ள பிரிவுகளின்படி பார்க்கும் போது

> 63. Execution of unprivileged wills.-Every testator, not being a Collected by the All India Christian Council, www.christiancouncil.in Page 19 of 123 soldier employed in an expedition or engaged in actual warfare, 1*[or an airman so employed or engaged,] or a mariner at sea, shall execute his will according to the following rules:--
>
> (a) The testator shall sign or shall affix his mark to the will, or it shall be signed by some other person in his presence and by his direction.
>
> (b) The signature or mark of the testator, or the signature of the person signing for him, shall be so placed that it shall appear that it was intended thereby to give effect to the writing as a will.
>
> (c) The will shall be attested by two or more witnesses, each of whom has seen the testator sign or affix his mark to the will or has seen some other person sign the will, in the presence and by the direction of the testator, or has received from the testator a personal acknowledgment of his signature or mark, or of the signature of such other person; and each of the witnesses shall sign the will in the presence of the testator, but it shall not be necessary that more than one witness be present at the same time, and no particular form of attestation shall be necessary.

மேலே சொல்லப்பட்டுள்ள சட்டப்பிரிவுகள் உட்கூறு விவரங்கள் அடிப்படையிலும்,

> ***"Dhanalakshmi -Vs- Karuppusamy on 19 February 2013 Madras High Court in S.A. No.1160/2010"***

என்ற வழக்கில் உயில் சம்மந்தமாக சுட்டிக்காட்டப்பட்ட பல்வேறு தீர்ப்புகளின் அடிப்படையில்

> As Such, the cited precedent would also highlight that the Court should not attach undue importance to imaginary suspicions. All these aforesaid decisions are on the point that the Court should not at the time of analysing the validity of the will proceed on the hypothesis that the will is an invalid one.

என்று சொல்லப்பட்டுள்ளதன் அடிப்படையில் பார்க்கும் போது மேற்படி வா.சா.3 சாட்சியத்தின் மூலமாக உயில் எவ்வாறு நிரூபிக்க வேண்டுமென்று, இந்தியன் வாரிசுரிமைச் சட்டப் பிரிவு 63(சி)—ன்படியும், இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 68—லும் கூறியுள்ளவாறும், வாதி தரப்பில் வா.சா.ஆ.11 உயிலானது பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்பதாலும் அதில் சாட்சிய கையொப்பமிட்ட நபர் வா.சா.3 ஆக விசாரிக்கப்பட்டு உறுதி செய்யப்பட்ட நிலையிலும், மிக சிறிய குறைபாடுகளாக சொல்லப்பட்ட சார்பதிவாளர் அலுவலகத்தில் பிரபு கையெழுத்து போடவில்லை என்றும், அதற்கு பதிலாக ஒரு பாய் கையெழுத்து போட்டார் என்றும் சொல்லி சாட்சியம் அளித்திருப்பது ஒரு பதிவு செய்யப்பட்ட ஆவணத்தில் உள்ள விவரங்களின்படி அது தவறானது இல்லை என்பதாலும், மேற்படி வா.சா.ஆ.11 உயில் நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்த மேல்முறையீட்டு நீதிமன்றம் முடிவு செய்கிறது.

14.12. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.12 ஆவணத்தின் அடிப்படையில் மேற்படி வாதியும், அவருடைய கணவரான இறந்து போன புட்டுசித்தய்யாவின் பெயரும் மேற்படி 2005 —2009—ற்கான குடும்ப அட்டையில் பதிவு செய்யப்பட்டிருக்கும் நிலையில் 2—ம் பிரதிவாதி தரப்பில் சொல்லியுள்ளபடி பல ஆண்டுகளாக வாதியும், புட்டுசித்தய்யாவும் பிரிந்து வாழ்ந்திருந்தால் மேற்படி 2005—ம்

ஆண்டு குடும்ப அட்டையில் வாதியின் பெயர் இடம் பெற்றிருக்க வாய்ப்பில்லை என்று நீதிமன்றம் கருதுவதாலும், மேற்படி வாதியானவர் தன்னுடைய கணவருடன் தொடர்ந்து வாழ்ந்து வந்ததால் தான் புட்டுசித்தய்யாவிற்கு புற்று நோய் ஏற்பட்டுள்ளதின் காரணமாக சிகிச்சை செய்யப்பட்டுள்ள நிலையில் அவருக்கு ஏற்பட்டுள்ள நோய் விவரங்கள் அவருக்கு நன்றாக தெரிந்து ஒரு பதிவு செய்யப்பட்ட உயில் எழுதி வைத்திருக்கிறார் என்று நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே வாதியானவர் விசாரணை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள தன்னுடைய வழக்கை இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 3 மற்றும் 101—ன்படி

> "Proved".-A fact is said to be proved when, after considering the matters before it, the Court either believes it to exist, or considers its existence so probable that a prudent man ought, under the circumstances of the particular case, to act upon the supposition that it exists.

> Section 101 - Burden of proof Whoever desires any Court to give judgment as to any legal right or liability dependent on the existence of facts which he asserts, must prove that those facts exist. When a person is bound to prove the existence of any fact, it is said that the burden of proof lies on that person.

வழக்கை நிரூபித்துள்ளதாக இந்த மேல்முறையீட்டு நீதிமன்றம் கருதுகிறது.

14.13. பிரதிவாதிகள் தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள பி.வா.சா.1 சாட்சியத்தை பார்க்கும் போது அவர் இந்த வழக்கின் 2—ம் பிரதிவாதியாவார். பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணம் அவரது பெயருக்கு இறந்து போன புட்டுசித்தய்யா எழுதி வைத்ததாக சொல்லி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் அவருடைய முதல்விசாரணை எதிர்வழக்குரையை போன்றுள்ளது. குறுக்கு விசாரணையை பரிசீலிக்கும் போது தன்னுடைய அண்ணனுக்கு குழந்தைகள் இல்லாததால் தன்னுடைய பெயருக்கு உயில் எழுதி வைத்ததாகவும், அந்த உயிலில் தன்னுடைய மனைவி பற்றி சொல்லவில்லை என்றும், மேற்படி வா.சா.ஆ.11 உயில் ஆவணத்தை பற்றி தனக்கு தெரியாது என்றும்,

தான் வழக்கு சொத்தை அனுபவித்து வருவதற்கு எந்த ஆவணங்களும் இல்லை என்றும், 3—ம் பிரதிவாதியை தனக்கு தெரியாது என்றும், வாதி தான் தனது அண்ணனின் மனைவி என்றும், ஆனால் திருமண தேதி எனக்கு தெரியாது என்றும், பி.வா.சா.ஆ.1 உயிலில் சாட்சி கையொப்பமிட்ட நபர்கள் தனக்கு தெரிந்த நபர்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

14.14. மேற்படி பி.வா.சா.2,3 சாட்சிகள் மேற்படி பி.வா.சா.ஆ.1 உயிலில் சாட்சி கையொப்பமிட்ட நபர்கள் என்றும், அவர்கள் தங்கள் சாட்சிகளில் மேற்படி பி.வா.சா.ஆ.1 உயிலானது 12.12.2012 அன்று சத்தியமங்கலத்தில் உள்ள ஆவண எழுத்தர் அருண் என்பவரால் தங்கள் முன்னிலையில் எழுதப்பட்டது என்றும், அவர் கையெழுத்து செய்ததை தாங்கள் பார்த்ததகாவும், பின்பு 21.06.2016 தேதியில் புட்டுசித்தய்யா இறந்துவிட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் குறுக்கு விசாரணையில் மேற்படி பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்றும், அதில் 23.09.2012 தேதியிட்ட உயிலை பற்றி சொல்லவில்லை என்றும், புட்டுசித்தய்யாவுடன் வாதி சண்டை போட்டுக் கொண்டு சென்றுவிடுவார் என்ற விவரம் உயிலில் எழுதப்பட்டுள்ளதா என்ற விவரம் தனக்கு தெரியாது என்றும், மேற்படி புட்டுசித்தய்யாவின் மனைவி பற்றி தனக்கு தெரியாது என்பதை மறுத்தும், அவர் தனக்கு அதிகமாக பழக்கம் இல்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்கள். 2—ம் பிரதிவாதி கும்டாபுரத்தில் வசித்து வருகிறார் என்றும், வாதி தான் புட்டுசித்தய்யாவின் மனைவி என்று தனக்கு தெரியாது என்றும், 12.12.2012 தேதிக்கு முன்பாகவே அவருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டுவிட்டது என்றும், தாளாவடியிலேயே சார்பதிவாளர் அலுவலகமும், பத்திர எழுத்தரும் இருக்கும் போது சத்தியமங்கலத்திற்கு வந்து ஆவணம் எழுதியதற்கான காரணம் தனக்கு தெரியாது என்றும், புட்டுசித்தய்யாவும் வாதியும் பிரச்சனை இல்லாமல் தான் இருந்தார்கள் என்றால் சரிதான் என்றும்,

சண்டையில்லாமல் இருந்தார்கள் என்றும், 2-ம் பிரதிவாதி தனது ஊரைச் சார்ந்தவர் என்றும், மேற்படி உயில் எழுதுவதற்கு முன்பாகவே புட்டுசித்தய்யாவிற்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு, அவர் இயந்திரத்தின் மூலம் சுவாசித்துக் கொண்டிருந்தார் என்றும், அவர் சுமாராக பேசினார் என்றும், பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணங்களை யார் சொல்லி எழுதினார்கள் என்ற விவரம் தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

14.15. மேற்படி பி.வா.சா.1 முதல் பி.வா.சா.3 சாட்சிகளின் அடிப்படையில் பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தை பரிசீலிக்கும் போது மேற்படி உயில் எழுதிய 12.12.2012-ல் மேற்படி புட்டுசித்தய்யா அருள்வாடி கிராமத்தில் வசித்து வந்ததாக தான் எழுதப்பட்டுள்ளது. மேலும் தனக்கு கேன்சர் நோய் ஏற்பட்டுவிட்டதாலும், உயில் எழுதப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது. மேலும் மேற்படி முத்திரைத்தாள் மேற்படி புட்டுசித்தய்யா பெயரில் 27.08.2012 தேதியில் சென்னிமலையில் வாங்கப்பட்டு 12.12.2012 அன்று சத்தியமங்கலத்தில் வைத்து எழுதப்பட்டதாகவும் தெரிய வருகிறது. எனவே மேற்படி புட்டுசித்தய்யா 23.09.2012-ல் தனது மனைவி பெயருக்கு ஒரு பதிவு செய்யப்பட்ட ஒரு உயிலை எழுதியிருக்கும் போது இந்த 2-ம் பிரதிவாதியின் பெயரில் உயில் எழுதுவதற்காக புற்று நோயினால் பாதிக்கப்பட்டு 27.08.2012 தேதியில் அவர் அருள்வாடி கிராமத்திலிருந்து சுமார் 100 கி.மீ தொலைவிற்கு அதிகமாக உள்ள சென்னிமலை என்ற ஊருக்கு சென்று அவர் பெயரில் ஒரு முத்திரைத்தாள் வாங்கி கொண்டு வந்து அதை 12.12.2012-ல் தாளாவடியில் பத்திர எழுத்தர்களும், சொத்து சம்மந்தமான பதிவாளர் அலுவலகமும் இருக்கும் இடத்தை விட்டுவிட்டு சத்தியமங்கலத்திற்கு வந்து ஒரு அருகன் என்ற பத்திர எழுத்தர் மூலம் இந்த பதிவு செய்யப்படாத உயில் எழுதுவதற்கான காரணம் எதுவும் மேற்படி உயிலில் குறிப்பிடப்படவில்லை. எனவே மேற்படி விவரமானது பி.வா.சா.ஆ.1 உயிலை சந்தேகத்திற்கு இடமான ஆவணமாக கருத வாய்ப்பு ஏற்படுத்துகிறது.

14.16. மேலும் மேற்படி உயிலில் திருமணத்திற்கு பின்பு தனக்கு குழந்தை பாக்கியம் இல்லை என்று சொல்லியிருப்பதாலும் தனது தங்கையான சன்னம்மாள் தன்னை பராமரித்ததாக சொல்லியிருந்தாலும், மேற்படி 2012—ம் ஆண்டுவரை மேற்படி வாதியும், அவருடைய கணவரான புட்டுசித்தய்யாவும் வா.சா.ஆ.11,12 ஆவணங்களின்படி சேர்ந்து வாழ்ந்து வந்திருக்கிறார்கள் என்பதும், பி.வா.சா.3 சாட்சியத்தின்படி தெரியவருகிறது. எனவே புட்டுசித்தய்யாவிற்கும், வாதிக்கும் பிரச்சனை இல்லாமல் வாழ்ந்து வந்தார்கள் என்று சொல்லப்பட்டதன் அடிப்படையிலும் பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணமானது பதிவு செய்யப்படாத ஆவணமாக இருப்பதாலும் மேலும் புட்டுசித்தய்யா அருள்வாடியில் வசித்திருக்கும் போது அருள்வாடி கிராமத்திற்கு சம்மந்தப்படாத பி.வா.சா.2,3 மேற்படி பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தில் சாட்சி கையொப்பமிட்டிருப்பதும், முத்திரைத்தாள் வாங்கப்பட்ட விதத்திலும், மேற்படி பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணம் சந்தேகத்திற்கு இடமான ஆவணம் என்று நீதிமன்றம் கருதுகிறது. முன்பே வா.சா.ஆ.11 ஆவணம் இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 68 மற்றும் இந்தியன் சாட்சிய சட்டப்பிரிவு 63(சி)—ன்படி நிரூபித்துள்ள நிலையிலும், இந்த பதிவு செய்யப்படாத உயில் மேற்படி பதிவு செய்யப்பட்ட உயிலை மிஞ்சும் விதத்தில் எழுதப்பட்டது என்று எந்த ஒரு சந்தர்ப்ப சூழ்நிலையும், அது சம்மந்தமான சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் மூலமாகவும், பி.வா.சா.ஆ.1 ஆவணம் எழுத வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்று நிரூபிக்கப்படவில்லை என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே மேற்படி பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணம் உண்மையானதில்லை என்று இந்த மேல்முறையீட்டு நீதிமன்றம் முடிவு செய்து இந்த பிரச்சனை எணகள் 1, 2 தீர்மானிக்கப்படுகிறது.

15. பிரச்சனை எண் — 3 :

15.1. மேலே தீர்வு கண்ட பிரச்சனை எண்கள் 1,2—ன் அடிப்படையில் வாதி

வழக்குச் சொத்திற்கு  இறந்து போன புட்டுசித்தய்யா என்பவரின் மனைவி என்ற முறையிலும், அவர் எழுதி வைத்த வா.சா.ஆ.11 உயில் அடிப்படையில் உரிமையாளர் என்று தெரிய வருகிறது.  ஆனால் இந்த வழக்கில் 3—ம் பிரதிவாதியானவர் தான் புட்டுசித்தய்யாவின் சட்டப்படியான மனைவி என்று நீதிமன்றத்தில் ஆஜராகி பி.வா.சா.4 ஆக சாட்சியம் அளித்துள்ளார்.  ஆனால் பி.வா.சா.4 சாட்சியத்தை பார்க்கும் போது 1983 ஜூன் மாதத்தில் அருள்வாடி மண்டேசுவாமி கோவிலில் வைத்து திருமணம் நடைபெற்றதாகவும், பின்னிட்டு கருத்து வேறுபாடு ஏற்பட்டதால் தன் கணவரை பிரிந்து அர்தனஹள்ளி, ஹோப்ளி கிராமம், கோடிகுகனேவில் தனது பெற்றோர்களுடன் வசித்து வந்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.  மேலும் தனது கணவர் தன்னுடன் அங்கு வந்து வசித்து வந்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் மேற்படி பி.வா.சா.3 தன்னுடைய குறுக்கு விசாரணையில் திருமணம் நடந்த தேதி, மாதம், வருடம் தனக்கு தெரியாது என்றும், தனக்கு குழந்தைகள் எதுவும் பிறக்கவில்லை என்றும், தனது திருமணத்தை நிரூபிக்க எந்த ஆவணங்களும் இல்லை என்றும், புட்டுசித்தய்யா இறந்த பிறகு அவருடைய சொத்துக்களை சன்னம்மாவும் அவருடைய வாரிசுகளும் பயிர் செய்து வருகிறார்கள் என்றும், தனது அப்பா பெயர் சந்திரசேகரய்யா என்றும், 2014—ம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் தான் தனது கணவர் பெயர் புட்டுசித்தய்யா என்று சேர்த்ததாகவும், தான் அவருடைய மனைவி என்பதை காட்டுவதற்கு எந்த ஆவணங்களும் இல்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

15.2. மேற்படி 3—ம் பிரதிவாதிக்கு ஆதரவாக இந்த வழக்கில் விசாரிக்கப்பட்டுள்ள பி.வா.சா. 5,6,7 சாட்சிகளை பார்க்கும் போது மேற்படி இறந்து போன புட்டுசித்தய்யாவிற்கும், திருணமணம் நடைபெற்று கொஞ்ச நாட்களில் கருத்து வேறுபாடு ஏற்பட்டு 3—ம் பிரதிவாதி தன்னுடைய சொந்த ஊருக்கு சென்றுவிட்டார்

என்றும், 1983—ம் ஆண்டில் வெங்கட்ராமன் என்பவர் ஊர் எஜமானராக இருந்தார் என்றும், அவர்கள் கணவன், மனைவியாக வாழ்ந்தார்கள் என்பதை காட்டுவதற்கான எந்த ஒரு ஆவணங்களையும் பார்க்கவில்லை என்றும், புட்டுசித்தய்யா அருள்வாடியில் தான் இருந்தார் என்றும், அவர்கள் திருமணத்திற்காக எந்த ஒரு புகைப்படமும் எடுக்கவில்லை என்றும், அவர்கள் இருவரும் சேர்ந்து தான் கர்நாடகாவிற்கு குடி சென்றார்கள் என்றும், மேற்படி புட்டுசித்தய்யா இறந்ததும், 2—ம் பிரதிவாதியின் மகன்கள் தான் சொத்தில் விவசாயம் செய்து வருகிறார்கள் என்றும், வாதியை தனக்கு யார் என்று தெரியாது என்றும், வாதியும் புட்டுசித்தய்யாவும் கணவன் மனைவியாக வாழ்ந்தது தனக்க தெரியும் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்கள். மேற்படி சொத்து சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டு காவல்துறையில் புகார் கொடுக்கப்பட்ட விவரம் தனக்கு தெரியும் என்று சாட்சியம் அளித்துள்ளார்கள்.

15.3. மேற்படி பி.வா.சா.4 முதல் பி.வா.சா.7 வரையிலான சாட்சிகள் மற்றும் பி.வா.சா.ஆ.2,3 ஆவணங்களை பரிசீலிக்கும் போது மேற்படி 3—ம் பிரதிவாதியின் கணவர் பெயர் புட்டுசித்தய்யா என்று கூறியிருந்தாலும், மேற்படி புட்டுசித்தய்யாவின் நிரந்தர முகவரி அருள்வாடி கிராமம் என்றிருந்தாலும், மேற்படி அருள்வாடி கிராமத்தில் வசிக்கும் புட்டுசித்தய்யா தான் தன்னுடைய கணவர் என்பதை காட்டுவதற்கு எந்த ஒரு விவரங்களும் இல்லாத நிலையில் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.11 உயில், வா.சா.ஆ.12 குடும்ப அட்டை ஆகியவற்றின் அடிப்படையில் மேற்படி வாதியும், இறந்து போன புட்டுசித்தய்யாவும் தான் கணவன் மனைவி என்பதை யூகிப்பதற்கு போதுமான காரணங்கள் இருக்கும் போது இந்த 3—ம் பிரதிவாதியை 1983—ல் திருமணம் செய்து கொண்டு, புட்டுசித்தய்யாவை பிரிந்து வாழ்ந்து வருவதாக சொல்லப்படும் நிலையில், திருமணத்தை நிரூபிக்கும் வகையில் எந்த ஆவணங்களும் இல்லாததால் மேற்படி 3—ம் பிரதிவாதி இறந்து போன

புட்டுசித்தய்யாவின் மனைவி என்று கருதுவதற்கு வாய்ப்பில்லை என்று நீதிமன்றம் முடிவு செய்கிறது.

15.4. மேலும் மேற்படி வாதியும், புட்டுசித்தய்யாவும் கணவன் மனைவியாக வாழ்ந்த நிலையில் வழக்குச் சொத்துக்கள் அருள்வாடி கிராமத்தில் இருக்கும் போது கும்டாபுரத்தில் வசிக்கும் இந்த 2—ம் பிரதிவாதியும், அவருடைய மகன்களும் வழக்குச் சொத்திற்கு மேற்படி பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் வந்து பிரச்சனை செய்திருக்கிறார் என்றும், அதன் அடிப்படையில் தான் புகார் கொடுக்கப்பட்ட விவரங்கள் தெரிந்து பி.வா.சா.7 சாட்சியம் அளித்துள்ளார் என்பது நீதிமன்றத்திற்கு தெரிய வருகிறது. எனவே வழக்குச் சொத்துக்களைப் பொறுத்தவரையில் அது வாதியின் கணவர் புட்டுசித்தய்யாவிற்கு பாத்தியப்பட்டது என்பதும் அவர் எழுதி வைத்த உயில் மற்றும், அவரது வாரிசு என்ற முறையில் வாதி மேற்படி சொத்திற்கு உரிமையாளர் என்பதாலும், மேற்படி சொத்தின் உரிமையாளருக்கே அந்த சொத்தின் அனுபவம் கிடைக்கும் என்று நீதிமன்றம் கருதுகிறது.

***"C. Chinnasamy -Vs- M.C. Murugan on 25 April 2013, Madras High Court"***

என்ற தீர்ப்பின் அடிப்படையில் விவசாய நிலங்களை பொறுத்தவரையில் யாருக்கு உரிமை மூலம் உள்ளதோ அவர்களுக்கு தான் அனுபமும் உள்ளது என்ற கோட்பாட்டின் அடிப்படையில் பார்க்கும் போது மேற்படி பி.வா.சா.7—ம், பி.வா.சா.1—ம் வழக்குச் சொத்தில் 2—ம் பிரதிவாதி அனுபவத்தில் இருப்பதாக சாட்சியம் அளித்திருந்தாலும், அவர்களுக்கு வழக்குச் சொத்தைப் பொறுத்து எந்த உரிமையும் இல்லாத நிலையில் அவர்களை சட்டப்படியான அனுபவதாரர்களாக கருத முடியாது என்ற இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே விசாரணை நீதிமன்றம் 2—ம் பிரதிவாதி வழக்குச் சொத்தின் அனுபவத்தில் இருப்பதாக தீர்மானித்து அவருக்கு சாதமாக உறுத்துக்கட்டளை பரிகாரத்தை பொறுத்து வழக்கை தள்ளுபடி செய்திருந்தாலும்,

மேற்படி 2–ம் பிரதிவாதி வழக்குச் சொத்தின் மீது வாரிசு என்ற முறையிலோ அல்லது உரிமையாளர் என்ற அடிப்படையிலோ அனுபவம் இல்லாத நிலையில் மேற்படி விசாரணை நீதிமன்றம் உறுத்துக்கட்டளை பரிகாரத்தை தள்ளுபடி செய்திருப்பது ஏற்க கூடியதில்லை என்று இந்த மேல்முறையீட்டு நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும் புட்டு சித்தய்யா 2014–ல் இறந்தவுடன் வாதிக்கும், 2–ம் பிரதிவாதிக்கும் பிரச்சனை ஏற்பட்டு பிரச்சனை ஏற்பட்டிருப்பதால் மேற்படி சொத்து சம்மந்தமான எந்த ஒரு ஆவணங்களும் உயில் ஆவணங்களின் அடிப்படையில் வாதிக்கோ, 2–ம் பிரதிவாதியின் பெயருக்கோ மாற்றப்படாத நிலையில் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட தீர்வை ரசீதுகள் வாதி தான் வழக்கு சொத்தின் அனுபவத்தில் உள்ளார் என்பதை நிரூபிப்பதாக உள்ளது. ஆனால் 2–ம் பிரதிவாதி தரப்பில் வழக்குச் சொத்தில் அனுபவத்தில் இருப்பதாக 2014 முதல் எந்த ஒரு வருவாய் ஆவணங்களும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே 2–ம் பிரதிவாதி வழக்குச் சொத்தின் சட்டப்படியான அனுபவத்தில் இல்லை என்ற இந்த மேல்முறையீட்டு நீதிமன்றம் முடிவு செய்து இந்த பிரச்சனை எண்கள் 3 மற்றும் 4 தீர்மானிக்கப்படுகிறது.

16. பிரச்சனை எண் – 5 மற்றும் 6:

16.1. பிரச்சணை எண் 1 முதல் 4 வரையில் தீர்வு கண்டபடி விசாரணை நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்ட்ட தீர்ப்பும் தீர்ப்பாணையை பரிசீலிக்கும் போது விசாரணை நீதிமன்றம் வா.சா.ஆ.11 உயில் ஆவணத்தையும், பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தையும் நிராகரித்து வாதியானவர் இறந்து போன புட்டுசித்தய்யாவின் வாரிசு என்ற முறையில் வழக்குச் சொத்தைப் பொறுத்து வாதி தான் உரிமையாளர் என்ற விளம்புகை பரிகாரத்தை வழங்கியுள்ளது. ஆனால் அனுபவத்தை பொறுத்தும், உறுத்துக்கட்டளை பரிகாரத்தை பொறுத்தும் 2–ம் பிரதிவாதி சொத்தின் அனுபவத்தில் இருப்பதால் தான் வா.சா.1 தன்னுடைய சாட்சியத்தில் சொத்தில்

என்ன பயிர் செய்யப்பட்டிருக்கிறது என்பதற்கு பதில் சொல்லாமல் மௌனமாக இருந்திருக்கிறார் என்ற பதிவு செய்ய்பபட்ட அவருடைய வாக்கு மூலத்தின் அடிப்படையிலும், அதனால் வா.சா.1 சாட்சியத்திற்கு எதிராக எதிர் அனுமானம் கொண்டு 2-ம் பிரதிவாதி வழக்குச் சொத்தின் அனுபவத்தில் இருப்பதாக தீர்மானத்து உறுத்துக்கட்டளை பரிகாரத்தை வழங்க முடியாது என்று முடிவு செய்துள்ளது.

16.2. இந்த மேல்முறையீட்டு வழக்கு எண்.1/2017 என்பது விசாரணை நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட உறுத்துக்கட்டளை பரிகாரத்தைப் பொறுத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. ஆனால் குறுக்கு ஆட்சேபனை மேல்முறையீட்டு வழக்கு எண்.1/2017 என்பது அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்து அசல் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்பதற்காக தாக்கல் செய்யப்பட்டதாகும். பிரச்சனை எண்கள் 1 முதல் 4 வரையில் தீர்மானிக்கப்பட்டபடி வாதி தான் இறந்து போன புட்டுசித்தய்யாவின் மனைவி என்பது வா.சா.ஆ.11 ஆவணத்தின் அடிப்படையிலும், பி.வா.சா.1 ஆல் ஒப்புக் கொள்ளப்பட்ட சாட்சியத்தின் அடிப்படையில் முடிவு செய்துள்ளதாலும், வழக்குச் சொத்தக்கள் புட்டு சித்தய்யாவிற்கு பாத்தியப்பட்டது என்பதால் வாதி தான் மேற்படி சொத்திற்கு உரிமையாளர் என்று தீர்மானிக்கப்பட்டிருப்பதாலும், வழக்கில் சொல்லப்பட்ட பி அட்டவணை சொத்து காலி மனையிடம் என்பதாலும், வழக்கு ஏ அட்டவணை நிலம் விவசாய நிலம் என்பதாலும்

***"C. Chinnasamy -Vs- M.C. Murugan on 25 April 2013, Madras High Court"***

என்ற தீர்ப்பின் அடிப்படையில் விவசாய நிலங்களையும், காலி இடங்களையும் பொறுத்தவரையில் யாருக்கு உரிமை மூலம் உள்ளதோ அவர்களுக்கு தான் அனுபமும் உள்ளது என்ற கோட்பாட்டின் அடிப்படையில் வாதிக்கு தான் வழக்குச் சொத்தின்

அனுபவமும் உள்ளதாக கருத வேண்டும் என்பதாலும், மேற்படி விசாரணை நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்ட உறுத்துக்கட்டளை பரிகாரத்தை வாதிக்கு வழங்கலாம் என்று முடிவு செய்யப்படுகிறது.

16.3. மேலே கண்ட விவரங்களின் அடிப்படையில் இந்த மே.மு.வ.எண்.1/2017 அனுமதிக்கலாம் என்றும், குறுக்கு ஆட்சேபனை மேல்முறையீட்டு வழக்கு எண்.1/2017 தள்ளுபடி செய்யலாம் என்று முடிவு செய்து இந்த பிரச்சனை எண்கள் 5 மற்றும் 6—க்கு தீர்வு காணப்படுகிறது.

<u>17. பிரச்சனை எண் 7:</u>

பிரச்சனை எண் 1 முதல் 6 வரையில் தீர்வு கண்டபடி இந்த மேல்முறையீடுகளில் உள்ள தரப்பினர்களுக்கு வேறு பரிகாரங்கள் எதுவும் வழங்க தேவையில்லை என்று முடிவு செய்து இந்த பிரச்சனை எண் 7 தீர்மானிக்கப்படுகிறது.

18. இறுதியில், இந்த மேல்முறையீடு வழக்கு எண்.1/2017 அனுமதிக்கப்படுகிறது. சத்தியமங்கலம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் 18.10.2016—ம் தேதியில் அசல் வழக்கு எண்.139/2014—ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பும், தீர்ப்பாணையும் ரத்து செய்யப்படுகிறது. வாதி அ.வ.எண்.139/2014—ல் கோரியபடி உரிமை மூல விளம்புகை பரிகாரமும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் வழங்கப்படுகிறது. குறுக்கு ஆட்சேபனை மேல்முறையீட்டு வழக்கு எண்.1/2017 தள்ளுபடி செய்யப்படுகிறது. வழக்கின் தன்மையைக் கருத்தில் கொண்டு அவரவர் செலவு தொகையை அவரவரே ஏற்கவேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

19. குறுக்கு ஆட்சேபனை மேல்முறையீட்டு வழக்கு எண்.1/2017 தள்ளுபடி செய்யப்படுகிறது. வழக்கின் தன்மையைக் கருத்தில் கொண்டு அவரவர் செலவு தொகையை அவரவரே ஏற்கவேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்துப்பார்த்து பிழைத் திருத்தங்கள் செய்யப்பட்டு 2017-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 12-ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்) டி.செல்வம்
சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.

பின்இணைப்பு - இல்லை.

(ஒம்) டி.செல்வம்
சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.

நகல்- மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
சத்தியமங்கலம்.